சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "நூலகங்களை கணினிமயமாக்குதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.143 — நாள் 16.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆனி–32

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண்.5767/உ3/2018, நாள் 07.06.2018 மற்றும் 19.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"வட்ட அளவில் வாசகர் பயன்பாடு அதிகமாக உள்ள 30 நூலகங்களைத் தேர்வு செய்து மாவட்ட மைய நூலகத்திலுள்ள நூலகச் சிறப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப் பெறுதல் போன்ற பல்வேறு பணிகளை மேம்படுத்தவும், நூலகங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் வாசகர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை அதிவிரைவாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.''

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், நூலகங்களில் நூல்களை கணினி மூலம் இரவல் வழங்குதல், நூல்களின் இருப்பு சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ளுதல், நூல் பட்டியலினை எளிதில் அறிய வசதிகள் செய்வதன் மூலம் நூலகங்கள் வளர்ச்சி அடைய வட்ட அளவில் வாசகர் பயன்பாடு அதிமுள்ள சிறப்பாக செயல்படும் 30 முழுநேர கிளை நூலகங்களை தேர்வு செய்து, அந்நூலகத்திற்கு நூலக மேலாண்மை மென்பொருள் மூலம் நூலக செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், அதற்கான செலவினத் தொகை ரூ.47,65,190/–ஐ (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டின் அறிவிப்பான "நூலகங்களை கணினிமயமாக்குதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, "வட்ட அளவில் வாசகர் பயன்பாடு அதிகமாக உள்ள 30 நூலகங்களைத் தேர்வு செய்து, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 2000–இல் உள்ள நடைமுறைகளை பின்பற்றி, மாவட்ட மைய நூலகத்திலுள்ள நூலகச் சிறப்பு

(த.பி.பா.)

மென்பொருளைப் பயன்படுத்தி நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப் பெறுதல் போன்ற பல்வேறு பணிகளை மேம்படுத்தவும், நூலகங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் வாசகர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை அதிவிரைவாக பெறுவதற்கு, நூலக மேலாண்மை மென்பொருள் மூலம் நூலக செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், அதற்கான செலவினத் தொகை ரூ.47,65,190/—ஐ (ரூபாய் நாற்பது ஏழு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2199/கூ.த.செ./(நிதி)/2018, நாள் 26.06.2018—ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை — 2.

<u>நகல்:—</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை—9.
நிதி (கல்வி—II)த்துறை, சென்னை—9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை — 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை—9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை—9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி. செந்தமிழ்செல்வி
பிரிவு அலுவலர்.
16/7/18